தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1979, ஏப்ரல் 20

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு முனுஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பரணம் கிராம கூட்டுறவு நாணய சங்கம்

குறுகிய கால வினா எண். 49—திரு டி. சுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் அரியலூர் வட்டத்திலுள்ள பரணம் கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கத்தின் சிறு விவசாயிகளுக்கு இந்த ஆண்டு கடன் வழங்காதது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இதுபற்றி பொது மக்களிடமிருந்து மனுக்கள் ஏதேனும் அரசிற்கு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) பொது மக்களிடமிருந்து மனுக்கள் ஏதும் வரவில்லை.

திரு. நா. சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் போது, ஆம் என்றும், பொது மக்களிடமிருந்து மனுக்கள் ஏதும் வரவில்லை என்றும் கூறினார்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். அடுத்த கேள்வி எண். 50. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் செயலர்.